**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 127/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. சின்னதுரை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of June 2023.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ம் ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய ஊர்காரர்கள். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 09.12.2017 ம் தேதி 05.30 மணியளவில் அ.சா.1 தாயார் சிம்சன் நாடார் வயலில் மாடு மேய்த்து கொண்டிருந்த போது அ.சா.1 யை எதிரி முன்விரோதம் காரணமாக கெட்ட வார்த்தையில் பேசியதாகவும், கையால் அடித்து கீழே தள்ளியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பொது இடத்தில் வைத்து அவருடைய பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவும், வழக்கு சம்வத்தை நீங்கள் நேரில் பார்த்ததாகவும், போலீசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகள் ஊர்காரர்கள் என்பதாரல் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 127/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | திருமதி. ஆறுமுகம். |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of June 2023.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 ம் ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய ஊர்காரர்கள். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 6வருடத்திற்கு முன்பாக நான் எனது மாடை வயலில் மேய்த்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரிக்கும் அசா.1 ன் தாயாரான நம்பிநாச்சியார் உடன் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். அதை அ.சா.1 தட்டி கேட்டார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 யை கையால் முதுகில் அடித்து கீழே தள்ளிவிட்டார்.

நான் தள்ளி இருந்ததால் அவர் என்ன வார்த்தை பேசி கொண்டிருந்தார்கள் கேட்கவில்லை. சம்வத்தை என்னுடன் சின்னதுரை மற்றும் முருகன் என்பவர்கள் பார்த்தார்கள் முருகன் தற்போது உயிருடன் இல்லை. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 127/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திருமதி. நம்பிராஜம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

***எதிரி ஆஜர்.***

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of June 2023.

நான் வள்ளியூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 லெட்சுமி எனது தாயார். ஆஜர் எதிரியை தெரியும் பெற்றோர் ஊரான மருதகுளத்தை சார்ந்தவர். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 7 வருடத்திற்கு முன்னர் மதிய நேரத்தில் எனது அம்மாவை ஆஜர் எதிரி தள்ளியது சம்பந்தமாக போலிசார் எங்களது வீட்டிற்கு வந்தார்கள் சம்பவம் நடந்த இடத்தை நான் அடையாளம் காட்டினேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். வழக்கு பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

11.12.2017 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடமான சிம்சன் நாடார் வயலையும் அதன் சுற்றுபுறங்களையும் மூன்றடைப்பு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.